க.பொ.த (சா.தரம்)
உதவிக் கருத்தரங்கு - 2016
தமிழ் மொழியும் இலக்கியமும் I
புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இலக்கம் | விடை இலக்கம் |
|---|---|
| 1 | 1 |
| 2 | 2 |
| 3 | 3 |
| 4 | 4 |
| 5 | 3 |
| 6 | 1 |
| 7 | 2 |
| 8 | 4 |
| 9 | 2 |
| 10 | 3 |
| 11 | 1 |
| 12 | 3 |
| 13 | 2 |
| 14 | 4 |
| 15 | 1 |
| 16 | 3 |
| 17 | 2 |
| 18 | 4 |
| 19 | 4 |
| 20 | 2 |

| வினா இலக்கம் | வினா இலக்கம் |
|---|---|
| 21 | 3 |
| 22 | 4 |
| 23 | 1 |
| 24 | 2 |
| 25 | 1 |
| 26 | 3 |
| 27 | 4 |
| 28 | 2 |
| 29 | 3 |
| 30 | 4 |
| 31 | 1 |
| 32 | 3 |
| 33 | 2 |
| 34 | 4 |
| 35 | 3 |
| 36 | 4 |
| 37 | 2 |
| 38 | 1 |
| 39 | 3 |
| 40 | 2 |

The National e-learning Portal for The General Education

[ பக் 2 ஐப் பார்க்க

**க.பொ.த (சா.தரம்) 2016**

**உதவிக் கருத்தரங்கு**

**தமிழ் மொழியும் இலக்கியமும் II**

**விடையளித்தல் தொடர்பான வழிகாட்டி**

| | | | |
|---|---|---|---|
| வினா | 01 | சுருக்க விடைகள் | 20 புள்ளிகள் |
| | 02 | கட்டுரை | 25 புள்ளிகள் |
| | 03 | சுருக்கம் | 10 புள்ளிகள் |
| | 04 | கிரகித்தல் | 10 புள்ளிகள் |
| | 05 | கடிதம் / பத்திரிகைச் செய்தி | 15 புள்ளிகள் |
| | | | 80 புள்ளிகள் |

## வினா இல. 01 : சுருக்கமான விடைகள்

(i) பசுமை + குளிர் + இளம் + சூடும்

(ii) ஐயா சாப்பிட்டு முடிந்து ஆறுதலாக/ ஆறுதலாய் இருக்கும்போது / பொழுது கேட்க வேண்டும்.

(iii) இறை - பெயர் (இறைவன் / கடவுள்)

இறை - வினை (இறைத்தல்)

(iv) (அ) உருவகம்

(ஆ) • துன்பம் ஆகிய கேணி

• துன்பம் கேணியாக உருவகிக்கப்பட்டுள்ளது.

(v) (அ) பூ மரம் / மரத்தின் இலை

(ஆ) பூமரம் - இரண்டாம் வேற்றுமைத் தொகை (பூவை உடைய மரம்)

மரத்தின் இலை - ஆறாம் வேற்றுமைத் தொகை (மரத்தினது இலை)

(vi) வானிலை சீரற்றுக் காணப்படுவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்லமாட்டார்கள்.

வானிலை சீரற்றுக் காணப்படுகிறது ஆகவே / அதனால் / எனவே மீனவர்கள் கடலுக்குச் செல்லமாட்டார்கள்.

(vii) (அ) ஞாலம் / ஞாலமெலாம்

(ஆ) நடுங்கிற்று

(viii) கரிகாற் சோழனால் கடாரம் வெல்லப்பட்டது.

(ix) மாணவர்களுக்கான நவீனமயப்படுத்தப்பட்ட நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது.

(x) சிறந்த விடையளிக்கும் ஆற்றல்

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

/{ பக். 3 ஐப் பார்க்க

## வினா இல. 02 : கட்டுரை எழுதுதல்

**புள்ளித்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| அ. | பொருளமைவும் அளவும் | - | 12 புள்ளிகள் |
| ஆ. | கருத்து வெளிப்பாடும் மொழிச்செம்மையும் | - | 06 புள்ளிகள் |
| இ. | கட்டுரை நுட்பங்கள் | - | 05 புள்ளிகள் |
| ஈ. | தலையங்கம் | - | 02 புள்ளிகள் |
| | | | 25 புள்ளிகள் |

**அ. மாதிரித் தலைப்புக்கள்**

- உணவூட்டமும் ஆரோக்கியமும்
- உணவுப் பழக்க வழக்கங்களும் உடல் நலமும்
- ஆரோக்கியத்துக்கான உணவு முறைகள்

முன்னுரை

- உணவின் முக்கியத்துவம்
- உடல் ஆரோக்கியத்திற்கும் உணவுக்குமிடையிலான தொடர்பு

தொடருரை

- இன்றைய உணவுப் பழக்கங்கள்
  - மேலைத்தேய உணவுகளை நாடல்
  - பொதி செய்யப்பட்ட உலர் உணவுகளை உட்கொள்ளல்
  - நேரத்தைக் கருத்திற்கொள்ளாது உணவு உட்கொள்ளல்.
  - பழமையான மரபுரீதியான உணவுகளைத் தவிர்த்தல்.
  - அளவுக்கதிகமாக உட்கொள்ளல்
- இவற்றால் ஏற்படும் விளைவுகள்
  - தொற்றா நோய்களின் தாக்கத்திற்கு உட்படுதல்.
    உ-ம்: நீரிழிவு, இரத்த அழுத்தம், கொழுப்புப் படிவு போன்றன.
- உணவுப் பழக்கவழக்கத்தினை திருத்தி அமைக்க வேண்டிய தேவைகள் முறைகள்
- ஆரோக்கியமான உணவினால் ஏற்படும் நன்மைகள்

முடிவுரை

/( பக். 4 ஐப் பார்க்க

**ஆ. பேட்டி**

**மாதிரித் தலைப்புக்கள்**

- அனுபவம் தந்த பாடம்
- அனுபவமே ஆசான்
- ஆசானின் அனுபவம்
- செவ்வி காண்பவர், செவ்வி கொடுப்பவர், சந்திப்பு, வணக்கம், அறிமுகம் செய்தல்.
  (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பவற்றில் எதன் மூலமான செவ்வி காணல் என்பதை முன்வைத்தல்.)
- செவ்வி கொடுப்பவரது சுய விபரம்
  - ஆசிரியர் சேவையை விரும்பியதற்கான காரணங்கள்
  - அனுபவங்கள்
  - சாதனைகள்
  - எதிர்கால சமூகத்திற்கான கருத்துக்கள், இவை தொடர்பான பொருத்தமான வினாக்கள், விடைகள்
- பொருத்தமான விதத்தில் நிறைவு செய்தல்.

**இ. மேடைப் பேச்சு**

- மேடைப் பேச்சு முறையைப் பின்பற்றி எழுதுதல்
- சபையடக்கம்
- தலைப்பை முன்வைத்தல்
- இடையிடையே சபையை விளித்தல்
- தொகுத்து முடித்தல்

- **மாதிரித் தலைப்புக்கள்**
  - மனித நேயம்
  - மாறிவரும் உலகும் மனிதநேயப் பண்புகளும்
  - உலகமயமாதலும் மனிதநேயமும்
  - பொருத்தமான ஆரம்பம்
- உலகமயமாதல் என்பதன் விளக்கம்
  - மாறிவரும் உலகின் வளர்ச்சிப்போக்கிற்கு இணங்க மனிதன் தன்னை மாற்றியமைத்தல்.
  - பொருளாதார, சமூகக் காரணிகளில் காணப்படும் வளர்ச்சி நிலைகளும்
  - மனிதநேயப் பண்புகளில் ஏற்பட்ட மாற்றங்களும்
- மனிதநேயம் பற்றிய விளக்கம்

/ பக். 5 ஐப் பார்க்க

- அன்பு, இரக்கம் பணிவு
  - பிறருக்கு உதவுதல்
  - பெரியோரை மதித்தல்
  - விட்டுக்கொடுக்கும் தன்மை
- இம் மனிதநேயப் பண்புகளை வளர்ப்பதால் தனக்கும் பிறருக்கும் நன்மைகளை ஏற்படுத்தல்.
- சமூகம், நாடு, உலகம் முழுவதும் அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படுத்தல்.
- பொருத்தமான முடிவுரை

**ஈ. சிறுகதை**

- தரப்பட்ட கதைப்பகுதிக்கேற்ப கதையை வளர்த்துச் செல்லல்.
- சிறுகதை அமைப்பைப் பின்பற்றிச் செல்லல் .
- சிறுகதையின் தொடக்கம், தொடர்ச்சி, உச்சக்கட்டம் என்பன கவனத்திற் கொள்ளப்படல்.

**வினா இல. 03 : சுருக்கம்**

**புள்ளித்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| அ. | பிரதான கருத்து | - | 02 புள்ளிகள் |
| ஆ. | சொந்த மொழிநடை | - | 02 புள்ளிகள் |
| இ. | முக்கிய கருத்துக்கள் | - | 04 புள்ளிகள் |
| ஈ. | சொல்லளவு | - | 02 புள்ளிகள் |
| | | | 10 புள்ளிகள் |

**இடம்பெற வேண்டிய பிரதான கருத்துக்கள்**

- இன்றைய தொடர்பாடல், உலகத்தை ஒரு கிராமமாக்கியது.
- பல்வகைத் தொடர்பாடல் முறைகள் இருந்தபோதும் நேரடித் தொடர்பாடல் மேலானது.
- தொடர்பாடலைப் பண்புடனும் சிறப்புடனும் உறவாடும் தன்மைகளை வளர்ப்பதன் அவசியம்
- நாளாந்தம் பல்வேறுபட்டோருடன் தொடர்பு கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள்.
- தொடர்பாடலை திறம்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு ஆகியவற்றை வளர்ப்பதன் தேவை.
- அவ்வாறு இல்லையெனின் ஏற்படும் விளைவுகள்

**(10 புள்ளிகள்)**

குறிப்பு : சுருக்கம் எழுதும் முறை பற்றி விளக்கம் அளித்தல் வேண்டும்.

/ பக். 6 ஐப் பார்க்க

## வினா இல. 04 கிரகித்தல்

(1) சமூக வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்பு.

(2) சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழியின் மாற்றத்தையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் காரணிகள்.

(3) முற்காலத்திலே மொழிவளர்ச்சி பெரிதும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக இல்லாமை.

(4) தற்கால சமூகத்தின் நவீன தொடர்பாடல் தேவைகளுக்கேற்ப மொழியை வளர்த்தல் அல்லது இணக்கப்படுத்தலே மொழியை நவீனப்படுத்தல் ஆகும்.

(5) தொடர்ச்சியான மாற்றத்திற்குட்படும் விடயங்களே வளர்ச்சியடைவதால் மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்வின் இரு அம்சங்களாகும்.

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

## வினா இல. 05 கடிதம் / பத்திரிகைச் செய்தி

(அ) தொழின்முறைக் கடித அமைப்பு பேணப்படல் வேண்டும்.

- முகவரி
- உள்முகவரி
- விளிப்பு
- தலைப்பு
- உடல்
- முடிப்பு என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.
- பொருத்தமான தலைப்பிடல்

செயலாளர் என்ற வகையில் முன்வைத்தல்

- மூலிகைத் தோட்டம் அமைப்பதன் நோக்கம்
- தேவையான மூலிகைப் பயிர்கள்
- அவற்றைப் பயிரிட்டுப் பாதுகாக்கும் முறை
- மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கான ஏனைய ஆலோசனைகள்
- முடிப்பு

[ பக். 7 ஐப் பார்க்க

**அல்லது**

**பத்திரிகைச் செய்தி**

- கவர்ச்சியான, சுருக்கமான, பொருத்தமான தலைப்பைக் கொண்டிருத்தல்.
- விடயங்களைப் பந்தி பந்தியாக எழுதுதல்.
- விடயங்களை வெளிப்படுத்தும் விதம் மொழித்திறன், கருத்து வெளிப்பாட்டு முறை, அமைப்பு ஆகியவற்றைக் கவனித்தல் வேண்டும்
- இலக்கண வழுவின்மை, நிறுத்தற் குறியீடுகள் அவதானிக்கப்படல் வேண்டும்.
- விடயங்கள் ஓர் ஒழுங்குமுறையில் தொகுக்கப்பட்டிருத்தல்.
- முதலாம் நாள் நிகழ்வுகள் / இரண்டாம் நாள் நிகழ்வுகள்
    - ஆரம்பம் நிகழ்வு
    - தொடர்ந்து இடம்பெறவிருப்பவை.
    - முடிவு
- விழாவில் இடம்பெறவுள்ள குறிப்பிடத்தக்க வேறு அம்சங்கள்.

(ஆ) கடிதம், பத்திரிகைச் செய்தி

| | | **புள்ளித்திட்டம்** |
|---|---|---|
| அமைப்பு | - | 04 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 08 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| | | 15 புள்ளிகள் |

# க.பொ.த (சா. தரம்) 2016
# உதவிக் கருத்தரங்கு
# தமிழ் மொழியும் இலக்கியமும் III
# விடையளித்தல் தொடர்பான வழிகாட்டி

கட்டாய வினாக்கள்

| | | | |
|---|---|---|---|
| வினா 01 | குறு விடைகள் | 2 x 10 புள்ளிகள் | = 20 புள்ளிகள் |
| வினா 02 | செய்யுள் + உரைநடை<br>அ, ஆ, இ, ஈ, உ ஒவ்வொன்றுக்கும் பின்வருமாறு புள்ளி வழங்குக. | 4 x 5 புள்ளிகள் | = 20 புள்ளிகள் |
| வினா 03 | விருப்பு வினா | | = 15 புள்ளிகள் |
| வினா 04 | விருப்பு வினா | | = 15 புள்ளிகள் |

**தெரிவு வினாக்கள்**

05, 06, 07 (ஏதேனும் ஒன்று) = 10 புள்ளிகள்

80 புள்ளிகள்

**வினா இல 01**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i) (அ) உப்பில்லாக் கஞ்சி

(ஆ) தோய்த்த பழைய ஆடை

(ii) (அ) மன்மதன் / கரும்பை வில்லாக உடைய இறைவன் (கரும்பு + இறை)

(ஆ) நீரைச் சிந்தும் (அப்பு + இறைக்கும்)

(iii) (அ) சினிமா

(ஆ) ஒரு காட்சி மங்கி, அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுவது

(iv) (அ) உண்மைக்கு / வாய்மைக்கு அரிச்சந்திரன் என்று கூறுவர். இங்கு கலியுகத்திலே சத்தியமே பெரிது எனக் கருதி வாழ்ந்ததால் கலியுக அரிச்சந்திரன் என்பர்.

(ஆ) சத்தியம் / வாய்மை / உண்மை

(v) (அ) கைவிடலாம் என்ற பயம்

(ஆ) மயானம் / இடுகாடு / மையவாடி

(vi) (அ) தசரதன்

(ஆ) உருவக அணி - துயர் கடலாக உருவாக்கப்பட்டுள்ளது.

(vii) (அ) உலகளாவிய பரந்த மனப்பாங்கு / பரந்த உலக மனப்பான்மை

(ஆ) உலக மக்கள் (வையகம் - உலகம் இடவாகு பெயராக உலக மக்களைக் குறித்தது.)

[{ பக். 2 ஐப் பார்க்க

(viii) (அ) மூவேந்தர் / சேர சோழ பாண்டியர்
(ஆ) பறம்பு மலை

(ix) (அ) பாண்டவர் (பஞ்ச பாண்டவர்)
(ஆ) கிருஷ்ணன் / கண்ணன் (அமரர் - தேவர், கோமான் - தலைவன்)

(x) (அ) மூத்தம்மா
(ஆ) அன்பு / பாசம் / பரிவு

(2 × 10 = 20 புள்ளிகள்)

**வினா இல 02**

**2.** (i) (அ) உண்மையான சிறந்த நட்பு

(ஆ) உவமை மூலமாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.
அதாவது,
உண்மையான நட்பைக் காட்ட நாயையும், விலக்க வேண்டிய நட்பைக் காட்ட யானையையும் உவமைகளாகக் கொண்டு ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

(ii) (அ)
- நல்ல நூல்களைக் கற்று உணர்ந்தவர்கள்
- பொருட் பிழைகளைத் தவிர்ப்பவர்கள்
- அழகிய கவிதைகளை இயல்பாகப் படைப்பவர்கள்

(ஆ)
- "கவிதைகளை பொழியும் புலவர்களின் மனத்தில் இடித்து முழங்கி மின்னி பொழியும்படியாக" எனக் கவியாற்றல் மிக்க புலவர்கள் அஞ்சும் கவி படைக்கும் வல்லமை உடையவராக காளமேகப் புலவரின் கவியாற்றல் விளக்கப்படுகிறது.

(iii) (அ)
- திருமுடியில் துளசிமாலையினை அணிந்த சிறப்புக்குரியவர்
- தேவர்களும் முனிவர்களும் மட்டுமன்றி நால்வேதங்களும் இன்னமும் உண்மையை அறிந்துகொள்ள முடியாது தேடுகின்ற திருவடிகளை (பதம்) உடையவர்.

(ஆ) திரௌபதி மற்றும் தன்னுடைய சபதங்களை நிறைவேற்ற விரும்பிய வீமன் தான் தூது செல்ல விரும்பி வேண்டினான்.

(iv) (அ)
- மையக்கருத்துக்குப் பொருந்திய காட்சியமைப்பு.
- காட்சியமைப்புக்குப் பொருந்திய காட்சிப் படிமம்.
- அதற்குப் பொருந்திய ஒலி என்பன காணப்படும்.

(ஆ) மையக் கருத்தைச் சாராத காட்சிப் படிமம், ஒலி என்பன சம்பந்தமில்லாத காட்சியாக வந்தால் அது சினிமாவாகவல்லாமல் பல்சுவை நிகழ்ச்சியாகிறது.

[{ பக். 3 ஐப் பார்க்க

(v) (அ) அரசியற் கொள்கையின்படி மூத்த புதல்வனுக்கு முடிசூட்டுவதா? அல்லது கைகேயிக்குக் கூறிய சத்தியவாக்கை நிலைநாட்டுவதா? என்ற தடுமாற்றம்

(ஆ) நிலைமாறாத சத்தியம் முதன்மைப்படுத்தப்படுகிறது.

(4 x 5 = 20 புள்ளிகள்)

**வினா இல 03**

**3.** (அ)
- கம்பியூட்டர் பற்றிய அனுபவமின்றி வாங்கச் செல்லுதல்.
- கடைக்காரனுடைய வினாக்களுக்கு விடையளிக்க முடியாது திரும்புதல்
- விடயம் தெரிந்த நண்பர் ஒருவரை அணுகியமை.
- அவர் துணையுடன் மீண்டும் கடைக்குச் செல்லுதல்
- கம்பியூட்டருடன் ஏனைய பொருட்களையும் வாங்கியமை.
- கம்பியூட்டரை எப்படி வாங்குவதென்பது தொடர்பான விடயங்களை ஓரளவு அறிந்தும் அறியாதும் வாங்குதல்.

(ஆ)
- புதிதாய் பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றியது போல்
- கம்பியூட்டர் வருகையால் மகிழ்வு
- மேகலா பொட்டு வைத்தல், அரவிந்தன் ஓம் ஸ்ரீ ராம் என எழுதுதல்
- அதன் புது மணத்தை அனுபவித்தல்.
- மேகலாவின் பொழுதுபோக்காகவும், வீட்டுக் கணக்கு, சீட்டுக் கணக்கு பார்ப்பதற்கும் உதவுதல்
- கம்பியூட்டர் பரிபாசையிலேயே குடும்பத்தினர் உரையாடுதல். (அம்மா give me a mega bite)
- கணவன் மனைவிக்கிடையே கம்பியூட்டர் பரிபாஷையினை கையாளுதல். (If you want to Escape press hear)
- கதையினை காகிதத்தில் எழுதாது கணினிப் பொறியில் எழுதிச் சேமித்தல்.

**அல்லது**

(அ) **'இலட்சியமும் இலக்கியமும்'**

இலக்கியங்கள், இலட்சியவாதிகளையும் எதிர்மறையாக இலட்சிய வாழ்வில் நில்லாதவர்களையும் காட்டி இலட்சியத்தை வற்புறுத்தும் கதாபாத்திரங்களையும் படைத்துள்ளன. ஆனால் நிறை குறை உள்ள பாத்திரங்களையும் இலட்சிய வாழ்வை நோக்கி அழைத்துச் செல்கிறது.

- குறுந்தொகையில்

  "நிலத்தினினும் பெரிதே" என்ற பாடலில் தலைவியின் காதல் இலட்சியம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

[{ பக். 4 ஐப் பார்க்க

- முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி மன்னன் செயல்
- மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகனின் வள்ளண்மை.
- புலவர் பெருஞ்சித்திரனார்க்கு தன் தலையைக் கொடுக்கத் துணிந்த குமணவள்ளல்.

- சிலப்பதிகாரத்தில்,
  - பாண்டிமா தேவி, கண்ணகி ஆகிய இருவருள் சிறந்தவர் யார்? என்ற வினாவுக்குச் சேரமாதேவி பதிலளிக்கையில் ‘அத்திறம் நிற்க’ என்பதன் கருத்து அவரவர் தத்தம் இலட்சிய நெறியில் நின்றனர் என்பதனால் சமநோக்குப் புலப்படுகின்றது.
- மாணிக்க வாசகர்
  - சிவபெருமானின் திருவருளை இலட்சியமாகக் கொண்டு நின்று பட்டம், பதவி, பணம் ஆகியவற்றைத் தியாகம் செய்தவர் ‘நரகம் செல்வதற்குக் கூட அஞ்சமாட்டேன்.’ என்று சிவனை நினைத்துப் பாடியுள்ளார்.
- இராமாயணத்தில்,
  - தசரதன், வாய்மை நெறியில் நின்று தன் உயிரைத் தியாகம் செய்தமை.
- மகாபாரதம்,
  - தருமர், முத்தியைப் புறந்தள்ளி அறத்தினை இலட்சியமாகக் கொண்டு செயற்பட்ட நிலை.

    அருச்சுனன், மானத்தையே இலட்சியமாகக் கொண்டு உயிரைத் துச்சமென வாழ்ந்து காட்டியுள்ளான்.
- அரிச்சந்திர புராணம்
  - அரிச்சந்திரன் வாய்மை என்னும் இலட்சியத்திற்காகத் தன் செல்வங்களை இழந்தமை.

(ஆ) **‘இலட்சியமும் இலக்கியமும்’**

- தனி மனிதனிடத்தில் இலட்சியம் அமையா விட்டால் இலட்சியம் அமைந்த ஒரு சமுதாயத்தினை உருவாக்க முடியாது.
- சமூகத்தில் உள்ள பலர் தத்தம் இயல்புக்கு ஏற்ப இலட்சியங்களைக் கடைபிடிப்பதால் - ஒழுகுவதால் உலகம் இனிமை பெறுகிறது.
- இலட்சியவாதிகள் தாமும் வாழ்ந்து தான் வாழும் சமூகமும் வாழ்வதற்கு வழிகாட்டுவர். அதுவே நற்சமூக உருவாக்கத்திற்கு காரணமாகின்றது.
- இலட்சியம் உடையோர் உயர்வு தாழ்வு பாராட்டார். அதனால் சமூகத்தில் நிலை குலைவு ஏற்படாது.
- குறைநிறைகளைச் சீர்தூக்கி குறிக்கோள்களை ஏற்படுத்திச் செயற்பட்டு நற் சமூக உருவாக்கத்திற்கு உதவுகின்றனர்.
- சமூகப் பயன்களை காணச் செய்வது இலட்சியம்
- இலட்சியவாதிகள் பழமை, புதுமை ஆகிய இரு நிலைகளையும் இணைத்து சமூகத்தினை உருவாக்க வழிவகுப்பர்.

(15 புள்ளிகள்)

[{ பக். 5 ஐப் பார்க்க

**வினா இல 04**

(அ)
- மாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.
- செந்நெற் பாற்பானை செழிப்பாக பொங்கி இன்பம் தர வேண்டும்.
- உழவுத் தொழில் எங்கணும் பெருக்கமடைந்து உயர்வடைய வேண்டும்.
- அதனால் இந்த உலகோர் சிறந்து வாழ வேண்டும்.
- எமது நாடு செழிப்படைய வேண்டும்.
- விவசாயத்திற்குப் போதுமான அளவு (நிறைய) மழை பொழிய வேண்டும்.
- உழவுத் தொழில் ஓங்கி வளர வேண்டும்.
- இவ்வுலக மக்கள் அனைவரும் எல்லா வளத்துடனும் சிறப்பாக வாழ வேண்டும்.

(ஆ)
- வேலைச் சுமையினால் களைப்படைந்த, சினத்தினைக் கொண்ட அரிவி வெட்டுகின்ற வாலிபர்கள் மீது பிறரது கண்ணூறுபட்டு அவர்களுக்குத் தீங்கு எதுவும் ஏற்படாமல் காப்பாற்றுவீராக ஐயனார் பெருமானே என்றும் சிறப்பாகச் செய்து பிடிபோட்டு பூண்போட்டு செய்யப்பட்ட அரிவாளைக் கொண்டு நெற்பயிரை அறுவடை செய்யும் இளம் வாலிபர்கள் நாவூறு பட்டுத் தீங்கு எதுவும் ஏற்படாமல் காப்பாற்றுவீராக ஐயனார் பெருமானே என்றும் ஐயனாரிடம் வேண்டுதல் செய்வதாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ)
- தன்னிடம் காதலி வந்து சேரும் வரை காற்றை வீசாதே என்று நிலவை எறிக்காதே என்றும் கூறல்
- வாசனைப் பொருட்களால் காதலியை சுட்டுதல்.
- உன்னை கைவிட மாட்டேன் எனல்.
- ‘உன்னை அடையாவிட்டால் காட்டுப்பள்ளி செல்வேன்’ எனல்.
- உனக்குத் தீங்கு செய்தால் என்னை அல்லா ஒரு போதும் எள்ளளவும் கூட அனுமதிக்க மாட்டார்.
- பலவாறாக விளித்தல்.
  சீனத்துச் செப்பே, சிங்காரப் பூ நிலவே
- என்னுடைய இடத்தில் நிலையாக இருந்து வாழ்க்கைப்பட கனவு கண்டேன் எனல்.
- உனக்கு என்ன வேண்டும். உன் சம்மதம் கூறு எனல்.

/{ பக். 6 ஐப் பார்க்க

**அல்லது**

(அ) • மூடர், பேடர், முதியோர், மெலியோர் போன்றவர்களுக்கு அறிவுள்ள பெண்களைத் திருமணம் செய்துகொடுத்தல்.

- பெண்ணருமை அறியாத பேதையர்க்கு பெண்ணைக் கொடுத்தல்.
- முன் பின் அறியாதவர்களுக்கு திருமணம் செய்து கொடுத்தல்.
- பணத்திற்காகப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தல்.
- உண்பது, உறங்குவது, ஊர்க்கதை பேசுவது பெண்ணின் தொழில்கள் எனக்கூறுதல்.
- கணவனே கண் கண்ட தெய்வம் எனக் கருத வேண்டுமெனக் கூறுதல்
- பெண்களை அடிமைகளாகக் கருதுதல்.
- பெண்கள் கல்வி கற்பதனை விரும்பாத சமூகம்.
- பெண்கள் இன்பமாய் வாழ்வதை விரும்பாமை.
- பெண்கள் வீட்டினுள் அடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டமை.
- பெண்கள் கனவு கண்ட வாழ்வு கிட்டாமை.

(ஆ) • அறிவுள்ளோருக்கே அறிவுள்ள பெண்களை திருமணம் செய்து கொடுத்தல் வேண்டும்.

- பெண்ணின் அருமை தெரிந்தவர்களுக்கு பெண்களை திருமணம் செய்துகொடுத்தல் வேண்டும்.
- நன்கறிந்தவர்களுக்கு திருமணம் செய்து கொடுத்தல் வேண்டும்.
- பெண்ணிற்கு சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்.
- பெண், கல்வியைப் பெற வேண்டும்.
- தான் விரும்பியவனைத் திருமணம் செய்யும் சுதந்திரம் பெண்ணுக்கு வழங்கப்படல் வேண்டும்.
- பெண் திருமணம் ஆராய்ந்து பார்த்து, பொருத்தமாக நடைபெறல் வேண்டும்.
- பெற்றோர் தம் பெண் பிள்ளை மீது நம்பிக்கை வைத்து சுதந்திரம் வழங்கல் வேண்டும்.

(15 புள்ளிகள்)

**வினா இல 05**

(அ) • பரந்த உலக மனப்பான்மை.

- விருந்தோம்பல்.
- பிறரன்பு.
- ஈகை.
- தமக்கென வாழாப் பிறர்க்குரியராய் வாழ்தல்.
- என்கடன் பணிசெய்து கிடப்பதே எனச் செயற்படுதல்.
- அகத்திணை, புறத்திணை மரபினைப் பேணுதல்.
- மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை.
- மனத்தூய்மை.

[{ பக். 7 ஐப் பார்க்க

- விடாது முயலல்.
- 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற மனநிலை.
- 'உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்' என்னும் உயர் இலட்சியம்

(ஆ)
- சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் தொடக்கம் ஓர் உலக மனப்பான்மை தமிழ் நாட்டில் பரவியுள்ளது. புறநானூற்றில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' திருக்குறளில் 'யாதானும் நாடாமால் ஊராமால்' எனும் தொடர்கள் மூலம் இம்மனப்பான்மை இருந்ததாக கட்டுரை ஆசிரியரால் கூறப்படுகிறது.
- சமணம், பௌத்தம் போன்ற சமயங்களும் தமிழ்நாட்டில் வரவேற்கப்பட்டதால் இம்மனப்பான்மை விரிவாகியது.
- பார்ப்பனர், மொழிபெயர்த்தேயத்தார், யவனர், புலம்பெயர்மக்கள் போன்றோர் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள்.

(10 புள்ளிகள்)

**வினா இல 06**

(அ) அரசர்கள் தங்கிச் செல்லும் முன்றிலை (முற்றத்தை) உடைய தசரத சக்கரவர்த்தியின் முதல் பட்டத்திரசி மூன்றுலகங்களையும் படைத்த பிரமனை முன்னே தோற்றுவித்தவனான திருமாலை (இராமன்) மகனாகப் பெற்றதனால் அடைய வேண்டிய செல்வம் அனைத்தையும் யான் (பரதனாகிய யான்) தோன்றியமையால் இழந்த பெரியவள் என்று பரதன் கூறினான்.

(ஆ) நீதி நெறி தளம்பாத தனது வாய்மை நெறியினை என்றும் நிலை பெறச் செய்து உயிரைத் துறந்த தசரதச் சக்கரவர்த்தியின் இளைய பட்டத்தரசியாவாள். உலகில் உள்ள மக்கள் அனைவரும் வணங்குவதற்கு உரியவனான, இராமனுக்குப் பின்பு பிறந்தவனுமான தம்பியும் உள்ளான் எனக் கூறும் அளவுக்கு இராமனை விட்டுப் பிரியாத இலக்குமணனைப் பெற்றெடுத்துத்தந்த சிறப்புக்குரியவள் (சுமித்திரை) எனப் பரதன் கூறினான்.

(10 புள்ளிகள்)

**வினா இல 07**

(அ)
- இக்கவிதையில் எழுத்தறிவற்ற இளைஞன் ஒருவனை கதாபத்திரமாக்கி, அவனூடாக எழுத்தறிவின்மையின் அவலம் சித்திரிக்கப்படுகின்றமை.
- எழுத்தறிவற்ற இளைஞன், பதவிநிலை அதிகாரியுடன் சந்தித்தபோது ஏற்பட்ட அவலநிலை வெளிப்படுத்தப்படல்.
- கையொப்பமிடமுடியாது கைவிரல் அடையாளமிடுதல், வெட்கித் தலைகுனிதல், பரிதாபத்தின் மொத்த வடிவமாக நிற்றல் முதலியவற்றினூடாகச் சித்திரிக்கப்படல்.
- எழுத்தறிவின்மையால் எதிர்காலத்தில் அவனுக்கு ஏற்படக் கூடிய அவலங்களாக காதல் உணர்வு வெளிப்பட முடியாது போதல்
  "காகம் போல் அவன், விழுந்தவளின் வேலியோரமெல்லாம் கரைந்திடுவானோ" என்ற வரிகள் மூலம் சிந்தித்தல்.

[{ பக். 8 ஐப் பார்க்க

- வாழ்வே சூனியமாகப் போதல்
- குடும்பத்தில் மனைவியின் வெறுப்பு
- "எதிர்காலத்தில் சீறி ஒலி எழுப்பி ஓடாது உறையும் சிறு துளியாய்" ஆகிவிடுவானோ என்று சித்திரிக்கப்படுதல்.

(ஆ)
- தனது நிலையை எண்ணி தானே வெட்கப்படுவதோடு மற்றவர் முன் அவமானத்துக்கு உள்ளாக நேரிடும்.
- திருமணத்தின் பின் குடும்பத்தில் விரிசல் ஏற்படும்.
- மனைவி தன் வாழ்வைத் தொலைத்துவிட்டதாக எண்ண நேரிடும்.
- எதிர்கால வாழ்வு சூனியமாகப் போகும்.
- தன் காதல் உணர்வினை வெளிப்படுத்த ஒலியைத் தவிர எழுத்து அவனுக்குப் பயன்படாத நிலையை எண்ணி வேதனைப்படல்.
- வருங்காலத்தில் பிரவாகித்து ஓட வேண்டிய நதியை போன்றவன். அவன் போன பின்னரும் கதிரையில் இருந்து அந்த இளைஞனைப் பற்றி சிந்தித்து அவனுக்கு எழுத்தறிவும் கல்வியறிவும் கிடைக்கவில்லையே எனக் கவலைப்படுதல்.
- எழுத்தறிவினைத் தொலைத்துவிட்டதனால் எதிர்காலத்தில் சீறிப்பாய முடியாமல் உறைகின்ற சிறு துளியாய் அடங்கி ஒழுங்கி விடும் என அவனின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி கழிவிரக்கப்படல்.

(10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

* * *